செய்தி குறிப்பு எண் .60 நாள் 30.04.2010

# செய்தி வெளியீடு–30.4.2010

## தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுக்கும் மே தின வாழ்த்துச் செய்தி!

மே முதல் நாள்! மேதினி கொண்டாடும் மே தினம்! இத்திருநாளில் தமிழகத் தொழிலாளர் சமுதாயத்திற்கு எனது உளமார்ந்த நல்வாழ்த்துகள் உரித்தாகுக!

உண்ண உணவு, உடுக்க உடை, வாழ வீடு இவற்றோடு உலக வாழ்க்கைக்குத் தேவைப்படும் வசதிகள் அனைத்தையும் ஓயாத உழைப்பால் நமக்கு உருவாக்கித் தரும் தொழிலாளர் சமுதாயத்தை நினைந்து, வணங்கிப்போற்றும் உன்னதமான நன்னாள் இம் மே தினம்!

அமெரிக்க நாட்டின் சிகாகோ நகரில் 1890 மே முதல் நாளன்று நடைபெற்ற பேரணியில் தொழிலாளர்கள் 8 மணி நேர வேலை, முறையான ஊதியம் ஆகியவற்றை வலியுறுத்தி ரத்தம் சிந்திப் போராடி, உயிர்ப்பலி தந்து பெற்ற உரிமை வரலாற்றை நினைவுறுத்தும் நாள் இந்த மே தினம்!

1969இல் அண்ணா மறைவுக்குப் பின் நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற போது தொழிலாளர் நலனில் தனிக் கவனம் செலுத்துவதற்காக, தொழிலாளர் நலத்துறைக்கெனப் புதிதாக ஓர் அமைச்சகத்தை ஏற்படுத்தி; மே தினத்திற்கு ஊதியத்துடன் விடுமுறை வழங்கியதுடன், 1990ஆம் ஆண்டில் மே தின நூற்றாண்டு நிறைவினையொட்டி, சென்னை மாநகரில் நேப்பியர் பூங்காவுக்கு "மே தினப் பூங்கா" எனப் பெயரிட்டு, அங்கு மே தின நினைவுச் சின்னத்தையும் நிறுவி மே தினத்திற்குப் பெருமை சேர்க்கப்பட்டது.

2006இல் இந்த அரசு அமைந்தபின் தொழிலாளர்களுக்கு ஆண்டுதோறும் 20 விழுக்காடு போனஸ், ஊக்கத் தொகை ஆகியவை தடையின்றிக் கிடைத்திடவும் ஆவன செய்யப்பட்டுள்ளது. அத்துடன், எந்த ஒரு பாதுகாப்புமின்றி நாளும் உழைத்து மக்கள் சமுதாயத்திற்கு அளப்பரிய பயன்களை நல்கிவரும் இலட்சக்கணக்கான அமைப்புசாராத் தொழிலாளர்களின் நலன்களைக் காத்திட விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் உட்பட 31 அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்களை உருவாக்கி, அவற்றின்மூலம் ஏறத்தாழ 13 இலட்சம் தொழிலாளர் குடும்பங்களுக்குப் பல்வேறு நலத்திட்டங்களின்கீழ் 582 கோடி ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இப்படி, எண்ணற்ற சட்டங்களாலும் திட்டங்களாலும் தமிழகத்தில் வாழும் தொழிலாளர் குடும்பங்கள் அனைத்தும் பயன்பெறும்வண்ணம் தொடர்ந்து பாடுபட்டுவரும் இந்த அரசின் சார்பில் தமிழகத் தொழிலாளர்கள் அனைவருக்கும் எனது இனிய இதயம் கனிந்த மே தின நல்வாழ்த்துகளை மீண்டும் தெரிவித்து மகிழ்கிறேன்!

*****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9